# திராவிடப் போராளிகள்

**37** ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...




# வீராங்கனை ‘அன்னை’!

*1953-ஆம் ஆண்டு, சென்னை மாகாணத்தின் முதலமைச்சராயிருந்த ராஜகோபாலாச்சாரியார் குலக்கல்வித் திட்டத்தைப் பகுதி நேரப் பள்ளி/வேலைத்திட்டம் என்ற பெயரில், தொடங்குவதாக அறிவித்தார். இன்றைய பாரதிய ஜனதா கட்சி அரசின் **‘விஸ்வகர்ம யோஜனா’** திட்டத்துக்கே முன்னோடியாக அந்த அறிவிப்பு இருந்தது. அதனை எதிர்த்து தந்தை பெரியாரின் தலைமையில் திராவிடர் கழகமும், பேரறிஞர் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகமும் களப் போராட்டத்தில் இறங்கின.*

*ஜூலை மாதம் 13-ஆம் தேதி ராஜகோபாலாச்சாரியார் வீட்டின் முன் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் தலைமையில் மறியல் போராட்டம் நடத்தப்படும் என முடிவு செய்து அறிவித்துவிட்டார் அண்ணா. ஆனால், காவல்துறை முன்கூட்டியே, நாவலர் நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், என்.வி.நடராசன் ஆகியோரைக் கைது செய்துவிட்டது. அண்ணாவும் கைது செய்யப்பட்டார்.*

*அந்த நிலையில், “ஆச்சாரியார் வீட்டு முன்பு அறப்போர் துவங்க இருந்த சம்பத் சிறை செல்கிறார். அந்தப் பொறுப்பினை தோழியார் சத்தியவாணி முத்து அவர்கள் ஏற்று நடத்துவார்கள்” என்று அண்ணாவால் அறிவிக்கப்பட்ட வீராங்கனை தான் ‘அன்னை’ சத்தியவாணி முத்து அவர்கள்.*

## நிறைமாதக் கர்ப்பிணி வீராங்கனை

*அதன்படி 1953-ஆம் ஆண்டு ஜூலை 13-ஆம் நாள் காலை எட்டு மணிக்கு மறியல் செய்யத் திரண்டிருந்த தோழர்களை, தலைமை தாங்கி சென்னை பாண்டி பஜாரில் இருந்து முதல்வர் இல்லம் நோக்கி அழைத்துச் சென்றார் வீராங்கனை சத்தியவாணி முத்து. காவல்துறை அவர்களைத் தடுத்து கைது செய்தது. சற்றும் தயங்காமல், சிறைசென்ற அவர் நிறைமாத கர்ப்பிணி. அப்போது அவருக்கு வயது 30.*

**1957-ஆம் ஆண்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாகத் தேர்தலில் நின்றபோது போட்டியிட்டு வென்ற பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரே பெண் சத்தியவாணி முத்து.**

*அதனை விடவும் அதிர்ச்சி தரும் போராட்ட நிகழ்வுகளை அதற்கு முன்பே சந்தித்தவர் சத்தியவாணி. தந்தை பெரியார் அவர்களால் **‘துணிச்சல் மிக்கப் பெண்’** என்று பாராட்டப் பட்டவர். திராவிடர் கழக மேடைகளில் கேட்டவர்கள் வியக்கும்படியாகக் கொள்கை முழக்கம் செய்தவர்.*

## வன்முறையிலிருந்து தப்பித்தல்

*1945-ஆம் ஆண்டு புதுச்சேரியில் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் இன எதிரிகள் நடத்திய வன்முறையும், மாநாட்டில் பங்கேற்க வந்த தலைவர்களையும் பேச்சாளர்களையும் விரட்டி விரட்டித் தாக்கியதும் செய்திகளாயின. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைத் தாக்கி, அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி சாலையோரம் வீசிச் சென்ற அந்தக் கும்பல் புதுவையில் தங்கியிருந்த பேச்சாளர் சத்தியவாணியை விரட்டிச் சென்றது. அவர்களுக்குப் போக்குக் காட்டி, யாரோ ஒருவரது வீட்டில் நுழைந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டார் சத்தியவாணி. அங்கிருந்து தோழர்களின் துணையுடன் நேரடியாக ரயில்நிலையம் செல்லாமல், வளவனூர் வரை குறுக்கு வழியில் பயணம் செய்து அதன்பின் சென்னை வந்து சேர்ந்தார். அப்போது அவரது வயது 22.*

*கொள்கையில் உறுதியும் இயல்பிலேயே துணிவும் கொண்டிருந்த திராவிடர் இயக்கப் போராளிகளில் நிகரற்ற பல சாதனைகளைப் படைத்த அம்மையார் சத்தியவாணியின் வாழ்க்கையும் போராட்டங்களும் வெற்றிகளும் வளரும் தலைமுறை திராவிட இயக்கத் தோழர்கள் அறிந்திருக்க வேண்டிய வரலாறாகும்.*

## பெரியார் பாராட்டிய பேச்சாளர்

*1923-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதி சத்தியவாணி பிறந்தார். அவரது பெற்றோரான நாகைநாதர்- ஜானகி அம்மாள் செங்கல்பட்டில் வசித்து வந்தனர். நாகைநாதர் முற்போக்குச் சிந்தனை கொண்டவர். தன் மகள் கல்வி கற்க வேண்டும் என்பதில் உறுதிப்பாடு கொண்டு அவரைச் செங்கல்பட்டு ‘கொலம்பஸ்’ கான்வென்ட்டிலும், பின் தெரசா கான்வென்ட்டிலும் தொடக்கக் கல்வி கற்கச் செய்தார். பள்ளி இறுதி வகுப்பை சென்னை எழும்பூர் மாநில உயர்நிலைப்பள்ளியில் படித்து முடித்தார்.*

*தந்தையிடம் பெற்ற முற்போக்குச் சிந்தனைகளும், திராவிட இயக்கப் பிரச்சாரங்களைக் கேட்டும், ஏடுகளைப் படித்தும் கற்ற சமூகக் கொள்கைகளும் அவரை சுயமரியாதைப் பெண்ணாக உருவாக்கின. சமூகச் சீர்திருத்தம், ஒடுக்கப்பட்டோர் விடுதலை, பெண்களின் முன்னேற்றம் ஆகியவை அவரது குறிக்கோள்களாயின. பள்ளிப் படிப்பை முடித்தவுடன் 1941-ஆம் ஆண்டிலேயே சத்தியவாணி சுயமரியாதை இயக்கத்தில் இணைந்துவிட்டார். தந்தை பெரியார் சத்தியவாணியின் பேச்சாற்றலைப் பாராட்டினார்.*

*சுயமரியாதை இயக்கத்தின் தீவிரத் தொண்டர்களில் ஒருவராயிருந்த தோழர் முத்து அவர்களை விரும்பிய சத்தியவாணி, 1943-ஆம் ஆண்டு **‘தமிழ்த்தென்றல்’** திரு.வி.க அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டார். அதனால், சத்தியவாணி முத்து என்று அழைக்கப்பட்டார்.*

## அம்பேத்கருக்கு ஆங்கில வரவேற்பு

*சத்தியவாணியின் மேடைப்பேச்சில், சங்கப் புலவர்கள் முதல் சர்வதேசத் தலைவர்களாக இருந்த பெண்களையும் அவர்களது கருத்துகளையும் கேட்க முடிந்தது. அரசியல் ஆய்விலும் ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.*

*திராவிடர் கழகத்தின் மத்தியக்குழு உறுப்பினராகவும், தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவராகவும் இருந்த சத்தியவாணி முத்து அவர்கள் அரசியல் அதிகாரம் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு உதவும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்.*

*1944-ஆம் ஆண்டு சென்னையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. பகுத்தறிவாளர்கள் சார்பில், நடந்த அந்த விழாவில் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு ஆங்கிலத்தில் ஒரு வரவேற்பு அறிக்கையை வாசித்தளித்தார். அவரது ஆளுமைக்குச் சான்றாக அந்த நிகழ்ச்சி அமைந்தது.*

## முதல் கட்ட உறுப்பினர்

*தந்தை பெரியாருக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டு, 1949-ஆம் ஆண்டு அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது, சத்தியவாணி முத்து அதன் முதல் கட்ட உறுப்பினரானார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணித் தலைவர்களில் ஒருவரானார்.*

*அன்று முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இயக்கப் பொறுப்புகளிலும், போராட்டக் களங்களிலும் அமைச்சரவையிலும் ஆண் தலைவர்களுக்கு நிகரான இடத்தைப் பெற்ற ஒரே பெண் என்ற பெருமையைப் பெற்றார் சத்தியவாணி முத்து அவர்கள்.*

*1957-ஆம் ஆண்டுத் திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாகத் தேர்தலில் நின்றபோது போட்டியிட்டு வென்ற பதினைந்து சட்டமன்ற உறுப்பினர்களில் ஒரே பெண் சத்தியவாணி முத்து. அதன் பின்பு அவர் முதலிடம் பெற்ற சாதனைகளைப் பட்டியலிட்டால் வியப்பால் விரியும் விழிகளை இமைக்கவே முடியாது.*

(வருவார்கள்...)

### ஊடகர்கள் அச்சப்படுகின்றனரா?

**அ**ண்ணாமலையிடம் தலைமைப் பதவி இல்லாவிட்டாலும் தொண்டனாக பா.ஜ.க.வில் தொடர்வீர்களா என்று கேட்கப்பட்டது, இது ஒரு சாதாரணக் கேள்வி. அதற்கு ‘ஆமாம், இல்லை’ என்று சொல்லலாம். அல்லது பதில் அளிக்க விரும்பவில்லை எனலாம். அது எளிதான வழியும் கூட... ஆனால், பெண் நிருபரை ‘இங்கே வாங்க. உங்களுக்கு எதிர்காலம் இருக்கு. வளரணும். இப்படிக் கேள்வி கேட்காதீங்க’ என்று அறிவுரை சொல்வது போல மிரட்டுவதும் வேலைக்கு உலை வைத்துவிடுவேன் காலி பண்ணிடுவேன் என்பதையே அக்கறை உள்ளது போல மிரட்டும் தொனியில் பேசுவதும் அசலான ரவுடித்தனம். சக நிருபருக்கு இப்படி ஓர் அவமதிப்பு நடக்கும்போது அதைப் பார்த்துக்கொண்டும் அடுத்த கேள்விக்குத் தயாராவதும் நல்லதல்ல. நிருபர்களுக்குச் சுயமரியாதை என்பது மற்றவர்களைவிட சற்றே கூடுதலாக இருக்கவேண்டும். ஆனால், சீமான், அண்ணாமலை மாதிரியான அரசியல் ரவுடிகளிடம் மட்டும் ஏனோ, அது இல்லாமல் போய்விடுகிறது. இவர்களின் இந்த ரவுடித்தனம் வளர்வது அவர்களுடைய தைரியத்தில் அல்ல... நிருபர்களின் அச்சத்தால்.

**-எழுத்தாளர் அதிஷா X தளப் பதிவு**

### :ப்ளாஷ்பேக்





இராஜேந்திரன்

### அன்பளிப்பாக ‘பூங்கா’!

**மு**த்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய **‘தொல்காப்பிய பூங்கா’** நூல் வெளியீடு கோவையில் நடைபெற்றது. அந்த நிகழ்வு முடிவுற்ற பிறகு கோவை மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களோடு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர் கலைஞர் அவர்களின் ‘தொல்காப்பிய பூங்கா’ நூலை எங்கள் அனைவருக்கும் அன்பளிப்பாக வழங்கினார். அவரோடு புகைப்படம் எடுத்துக்கொள்ளும் வாய்ப்பும் அமைந்தது. ‘அருளாளர்’ என்று வர்ணிக்கப்பட்ட, கழகத்தின் பொருளாளர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களும், தலைவர் கலைஞரின் நிழலாக வாழ்ந்த அண்ணன் சண்முகநாதன் ஆகியோரும் அப்போது உடனிருந்தார்கள்.

**-ஜி.டி.இராஜேந்திரன், வழக்கறிஞர் அணி முன்னாள் அமைப்பாளர், கோவை மாநகர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

### கார் ஓட்டுநரான கண்ணப்பன்!

**1976-ஆம் ஆண்டு மிசா காலத்தின் போது கலைஞருடன் யாரும் இருக்கக்கூடாது எனத் திட்டமிட்டு நெருக்கடிகள் கொடுக்கப்பட்டன. கலைஞர் தனியாகவே எங்கும் சென்று வந்தார். அப்போது அவருக்கு இரண்டு ஓட்டுநர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவர் உடல்நிலை சரியில்லை எனக் கூறிவிட்டு வேறு ஒருவரிடம் வேலைக்குச் சேர்ந்துவிட்டார். மற்றொருவரும் வேலையில் இருந்து நின்றுகொள்வதாகக் கூறிவிட்டார். அந்தச் சூழலில் கலைஞரின் காரை ஓட்டும் பொறுப்பை முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் ஏற்றுக் கொண்டார். ஆனால், அதையும் பொறுத்துக் கொள்ளமுடியாமல் கண்ணப்பனும் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 259




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.